## 28.35 மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி குறித்து கூடுதல் அதிகாரம் வழங்குதல் – அரசின் முடிவுகள்

---

பள்ளிக் கல்வி (வி2) துறை

அரசாணை (நிலை) எண்: 268 நாள் : 27.08.1999

படிக்க :

ஊரக வளர்ச்சித்துறை நேர்முக கடித எண்:34191/சி4/98–6, நாள் .13.7.99

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அம்முடிவுகளின்படி பள்ளிச்சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி என்ற தலைப்பின் கீழ் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் இவ்வாணையின் இணைப்பில் கண்டவாறு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, மேற்பார்வை, கண்காணித்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் போன்ற கூடுதல் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

2. இவ்வாணை ஊரக வளர்ச்சித்துறையின் அ.சா.எண்:32134/சி4/99, நாள்: 12.8.99 ,இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ. கௌரிசங்கர்**
அரசு செயலாளர்

## இணைப்பு

### கிராம ஊராட்சிகள்

1. வயது வந்தோர் கல்வி, பள்ளி சாராக் கல்வி செயல்பாட்டைக் குறித்து மேற்பார்வையிடுதல், மாணவர்களை சேர்த்தல், அதற்கான வசதிகளைச் செய்தல்.

2. முறைசாரா கல்வி இயக்ககத்தைப் பொறுத்தவரையில் பயனாளிகளைக் கண்டறிவது மையங்களைப் பேணுவது, முறைசாராக் கல்வி பரவ ஏதுவாக வாசக சாலைகள் அமைக்கலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. பள்ளி சாராக் கல்வி மையம் அமைத்தல், மேற்பார்வையிடுதல் அதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

2. பள்ளி சாரா கல்வி மையங்களின் செயல்பாட்டை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் முழு அளவில் கல்வி அறிவை பெறுவோருக்கு திட்டங்கள் தயாரித்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடுதல், அலுவலர்களை மேற்பார்வையிடுவது அரசு பொறுப்பாக இருக்கும். மாவட்ட ஊராட்சி வழங்கும் ஆலோசனைகள் முறைசாராக் கல்வி அலுவலர்களிடம் அளிக்கப்படவேண்டும்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம நல பணியாளர் மூலம் வயது வந்தோர் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துதல் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

2. வயது வந்தோர் எழுத்தறிவு திட்டம் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

3. எழுத்தறிவு பெற்றவர்களுக்கு மேல்நிலைக் கல்வி பெறும் திட்டம் பற்றி உதவி கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

4. அறிவொளி இயக்ககம் வாயிலாக கல்வி அறியாமையை முழுமையாக அகற்ற சிறப்பு திட்டம் பற்றி உதவி கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

5. பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வித் திட்டம் பற்றி மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. கிராம நலப் பணியாளர் வாயிலாக வயதுவந்தோர் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துதல் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

2. வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

3. படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கும் பள்ளிக் கல்வி தொடங்கப் பெறாதவர்களுக்கம் நலன் அடைவதற்கான பள்ளி சாரா கல்வித் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

4. எழுத்தறிவு பெற்றவர்க்கான மேல்நிலைக் கல்வி பெறும் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

5. அறிவொளி இயக்கம் வாயிலாக கல்வி அறியாமையை முழுமையாக அகற்றுவதற்கான சிறப்புத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

6. பழங்குடியினர் பகுதியில் வயது வந்தோர் கல்வி அறிவுத் திட்டம் பற்றி மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

**எம்.ஏ. கௌரிசங்கர்**
அரசு செயலாளர்